# அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம், றொம்மன்
ANNAI POOPATHI TAMILSK KULTURSENTER, ROMMEN
ANNAI POOPATHI TAMIL CULTURAL CENTER, ROMMEN

## பெற்றோருக்கான வாராந்தத் தகவல்கள்!

*கிழமை இல. 35 - 2025*

வணக்கம் அன்பார்ந்த பெற்றோர்களே!

- பெற்றோர் பிரதிநிதிகள் சந்திப்பு இவ்வாரம் 30.08.25 சனிக்கிழமை 9:45 மணிக்கு 2ம்மாடி மண்டபத்தில் நடைபெறும்.
- பாடநூல் விற்பனை இவ்வாரமும் நடைபெறும். பாடநூல் கட்டணங்களை விப்ஸ் மூலம் செலுத்த வேண்டும் என்பதனை நினைவூட்டுகின்றோம்.
- அறிவாடல் தெரிவுப்போட்டி எமது வளாகத்தில் 19,20.09.25ம் திகதிகளில் வகுப்புநேரத்தில் நடைபெறும். இப்போட்டியில் பங்குபெற விரும்பும் மாணவர்கள் அதற்குரிய கேள்விக்கொத்தினை நிருவாகத்தில் பெற்றுக்கொள்ளவும்.
- பெற்றோர்களாகிய தாங்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க திருக்குறள் ஒப்புவித்தல் போட்டிக்கான திகதியில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. எமது வளாகத்தில்
  இவ்வாண்டு ஐப்பசி மாதம் 19ம்திகதி நடைபெறும். அன்னைமுற்ற திருக்குறள்போட்டி 25,26.10.25ம் திகதிகளில் நடைபெறும்.
- திருக்குறள் ஒப்புவித்தல் போட்டிக்குரிய தாள்கள் வகுப்பில் சென்றவாரம் வழங்கப்பட்டுள்ளது.

**நிதி**

2025 இலைதுளிர் காலத்துக்குரிய தவணைக்கட்டண வரவுத்தாள் ஆனி மாதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இக்கட்டணங்களைச்
செலுத்தும்படி வேண்டுகின்றோம். ஏற்கனவே செலுத்தியவர்கள் இத்தகவலை விலத்திச்செல்லவும். விவரம் தேவைப்படின் எம்மைத் தொடர்புகொள்ளவும்.

அன்னை தலைமை மற்றும் எம்மால் வழங்கப்பட்ட கட்டண அறவீடுகள் ( அங்கத்துவ கட்டணம் , தவணைக்கட்டணம்) முழுமையாகச் செலுத்தியவர்கள் மட்டுமே (3 மாதங்களுக்கு முன்னர் செலுத்தியிருத்தல் வேண்டும்.)

அங்கத்துவத்துவ உரிமையினை உறுதிப்படுத்தியவர்கள் என்பதனை அறியத்தருகின்றோம்.

**தேர்வுக்குழு 2025**

இவ்வாண்டு இலையுதிர் காலப்பகுதியில் ஆண்டுக்கூட்டத்தினை நடத்தலாம் என தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கு முன் அனைவரும் தங்களின் உறுப்பினர் உரிமையை உறுதிப்படுத்துமாறு அன்போடு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். புதிய நிருவாக அங்கத்தவர்களை நிருவாகத்திற்கு உள்வாங்கவுள்ளோம். எனவே நிர்வாகத்தில் இணைந்து பணியாற்ற ஆர்வமுள்ளவர்கள் விரைவாகத் தங்கள் விவரங்களைத் தெரிவுக்குழுவினருக்கு எழுத்துமூலமாக வழங்குமாறு வேண்டப்படுகின்றீர்கள். நிர்வாகத் தெரிவுக்குழு மின்னஞ்சல்: valgkomite.rommen@annai.no

**நிர்வாகத்தில் இணைந்து பணியாற்ற விருப்புபவர்கள் கீழேயுள்ள விண்ணப்பப்படிவத்தை 07.09.2025ம் திகதிக்கிடையில் நிரப்பி அனுப்பவும்.**

https://forms.office.com/Pages/ResponsePage.aspx?id=fGrPxCG_x0GSpcQdWdZrrl_nKNWm5uZMqR5fL7l8RexURENVVlUwVzY1QURHTDBKQ01JNUZKVzYxUS4u

**நிர்வாகத்தில் இணைந்து கொள்பவர்களுக்கு இருக்கவேண்டிய முக்கிய தகைமை!**
*அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடத்தின் யாப்பு விதிகளுக்கும், நடைமுறைவிதிகளுக்கும் நோர்வே நாட்டு சட்டவிதிகளுக்கும் கட்டுப்பட்டு, கல்வி, கலை மற்றும் விளையாட்டு நிகழ்வுகளுக்குப் போதியளவு நேரம்விடக்கூடியவர்களாக இருத்தல் அவசியம். முக்கியமாக உறுப்பினர் உரிமையை முழுமையாகப் பெற்றவராக இருத்தல் வேண்டும்.*

***எமது வளாக நிர்வாகச் செயற்பாடுகளில் அல்லது எம்மால் வழங்கப்படும் தகவல்களில் தெளிவின்மை அல்லது ஐயப்பாடுகள் இருப்பின் வளாகப்பொறுப்பாளருடன் நேரடியாகத் தொடர்புகொள்வதன் மூலம் தேவையற்ற ஊகங்களைத் தவிர்த்துக்கொள்ளலாம்.***
***தொலைபேசி இல. 004740076104.*** **நன்றி!**

நிர்வாகம் - றொம்மன் வளாகம்
அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம்.